இணைப்பு I

[38-ஆம் பக்கத்தில் 2-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினவின் விடையைக் காண்க.]

தெரிந்தெடுத்த மாவட்டங்களில் அடைவாயுள்ள சில பகுதிகளில் சில முன்னோடித் திட்டங்களை மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அப்போதுதான், இந்த முன்னோடித் திட்டங்கள் வளர்ச்சியின் எல்லாக்கூறுகள் பற்றியும் கவனித்து, அந்தப் பகுதியில் 15 வயது முதல் 59 வயது வரையுள்ளவர்களில் வேலை செய்ய முன்வருகின்ற ஒவ்வொருவருக்கும், ஆதாயந்தருகிற பல்வேறு தொழில்களில் படிப்படியாக வேலைவாய்ப்பு அளிக்க இயலும். அதன் படி, இந்திய அரசு இந்த மாநிலத்திற்கு ஒரு முன்னோடித் திட்டத்தை ஒதுக்கி யுள்ளது; இந்த முன்னோடித் திட்டம் தென்னார்க்காடு மாவட்டம் மங்களூர் வட்டாரத்தில் செயற்படுத்தப்படும்.

2. அரசு, இத்திட்டத்தைத் தென்னார்க்காடு மாவட்டம் மங்களூர் வட்டத்தில் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டப் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பு ஏற்பார். கிராம வேலைவாய்ப்புக்கான விரைவுத் திட்டத்தின் கீழ் உள்ள பணித்திட்டங்களைத் தற்போது நிறைவேற்றி வருகின்ற பணி யாளர் அமைப்பால் இத்திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின் கீழுள்ள பணிகள் அனைத்தும் அரசு நிலத்தில் அமைக்கப்படும்; அவ்வாறு ஏற்படுத்தப் பட்ட சொத்துக்களின் மீது சமுதாயம் முழுவதும் உடைமையுரிமை, நிர்வாக உரிமை, பயன்பாட்டுரிமை ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும் கீழ்வருவனவற்றை போன்ற தனி நேர்வுகளில் விலக்களிக்கப்படலாம் :—

(அ) சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கென்று குறிப்பாகவுள்ள சொத்துக்கள்; எடுத்துக்காட்டாக, அரிசனக் குடியிருப்புகள், அரிசனக் குடி யிருப்பிடங்களில் உள்ள கிணறுகள், சிறிய, ஆதாயம் அற்ற உழவர்கள் அடங்கிய தொகுதிகளுக்கான பொதுப்பாசனக் கிணறுகள்;

(இ) சிறிய நிலவுடைமைகளை ஒருங்கு தொகுத்தல், மண்வளப் பாது காப்பு, நிலத்தைப் பண்படுத்தல் முதலியன; இத்தகு பணிகள் தொழில்நுட்ப நிர்வாகக் காரணங்களுக்காக கிராம அளவில் அல்லது பகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள பணிகளாகும்.

இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படக்கூடிய பணிகளின் தன்மை வருமாறு :—

(அ) வேளாண்மை உற்பத்தியுடன் நேரடித் தொடர்புடைய பணிகள்:

சிறு பாசனம்.

மண்வளப் பாதுகாப்பு.

காடுவளர்ப்பு/பண்ணைக்காடு.

நிலத்தைப் பண்படுத்தலும் மேம்படுத்தலும்.

வடிகால் வசதி, கரைகள் அமைத்தல் முதலியன.

நீர்ப்பாதுகாப்பும், நிலத்தடி நீர்வளம் மீண்டும் பெருக **ஆவன செய்தலும்.**

(இ) வேளாண்மை உற்பத்திக்கு மறைமுகமாக உதவும் பணிகள் :

மீன்வளர்ப்புக் குளங்கள்.

மேய்ச்சல் நில மேம்பாடு.

மரங்கள் நடுதல்.

கிராமச் சேமிப்புக் கிடங்குகள்.

(உ) பகுதியின் பொது வளர்ச்சிக்குத் தொடர்பான பணிகள் :

சாலை அமைத்தல்.

கிராமக்குடிநீர் வழங்கல்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்கு வீட்டு வசதி.

பள்ளிக் கட்டிடங்கள்.

இப்பணித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பணிக்கும் ஆகும் செலவு ரூ. 30,000-உம் அதற்கதிகமாகவும் இருக்கும்; ஆனால், சில நேர்வுகளில், இச்செலவு ரூ. 10,000 ஆக இருக்கக்கூடும்.

3. இத்திட்டம், பின்வருமாறு 2,800 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வகை **செய்கிறது :**

முதல் ஆண்டு	..	1,000
2-வது ஆண்டு	..	1,900
3-வது ஆண்டு	..	2,800

மூன்றுவது ஆண்டுக்குள், வேலை தேடிக்கொண்டிருக்கும் அனைவருக்கும் இத் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. இப்பணித் திட்டத்தின்கீழ் ஊதிய வீதம், அதே வகைப்பணிக்கு உள்ளூரில் நிலவும் ஊதிய வீதத்தைக் காட்டிலும் உயர்ந்த அளவாக இருக்க வேண்டும். ஊதிய வீதம் ஒரு தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு ரூ. 4 ஆக இருக்கும். வாரத்தில் ஒருநாள் விடுமுறையாக இருக்கும். ஊதியம் வாரத்துக்கு ஒருமுறை வழங்கப்படும்; ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் ஒரு தொழிலாளி சம்பாதிக்கக்கூடிய ஊதியத்துக்கு உச்சவரம்பு **எதும் இராது.**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1973 பிப்ரவரி 5]

5. இத்திட்டத்துக்கு, இந்திய அரசால் மூன்றாண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை விவரம் வருமாறு :—

1972–73	..	ரூ. 10.00 லட்சம்.
1973–74	..	ரூ. 15.79 லட்சம்.
1974–75	..	ரூ. 20.57 லட்சம்.

இத்திட்டத்துக்காகும் செலவு முழுவதும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படும். நிதி ஒதுக்கீட்டில் 5 சதவீதம் பணியாளர் நியமனத்துக்குச் செலவிடப்படலாம். தொழிலாளர் அணிகளை அமைப்பதற்குத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ரூ. 20,000 தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. மாவட்ட அளவில் பின்வருமாறு ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை அமைப்பதற்காகவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது; அக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார் :—

1. மாவட்ட ஆட்சித் தலைவர்	தலைவர்.
2. (தொடர்புடைய) வருவாய்க் கோட்ட அதிகாரி	உறுப்பினர்.
3. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை–கிராமப்பணிகள்)	,,
4. மாவட்ட வேளாண்மை அதிகாரி.	,,
5. மாவட்டப் புள்ளி விவர அதிகாரி.	,,
6. மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி.	,,
7. மீனளத்துறை உதவி இயக்குநர்.	,,
8. மாவட்ட நல அதிகாரி.	,,
9. தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழு, மங்களூர்.	,,
10. அப்பகுதியைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்.	,,
11. கூற்றத் (வட்டாரம்) தலைவர், சேரணி.	,,
12. வேளாண்மை கோட்டப் பொறியாளர்.	,,
13. வனத்துறைக் கோட்ட அதிகாரி.	,,
14. திட்ட அதிகாரி.	,,

குழு இயன்றவரை அடிக்கடி கூடும். இத்திட்டத்தின்கீழ் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்கும் இக்குழு பொறுப்புடையதாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1973 பிப்ரவரி 5

7. மாநில அளவில், கிராம வேலைவாய்ப்புக்கான விரைவுத் திட்டம் குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவும், முன்னோடி மும்முர கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் கண்டுள்ள முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும். தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மேற் சொன்ன குழுவின் கூட்டத்திற்குச் சிறப்பு அழைப்பின்பேரில் பங்கு கொள் வார்.

8. முன்னோடி மும்முர கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்க் கிடைக்கக் கூடிய நிதியைப் பயன்படுத்தி, மங்களூர் வளர்ச்சி வட்டாரத்துக்கெனப் பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றை வகுக்கும் கருத்துடன், ஏனைய துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகளையும், சமுதாய வளர்ச்சித் திட்டப்பணிகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம் மங்களூர் வளர்ச்சி வட்டாரத்தை மாதிரி வளர்ச்சி வட்டாரமாக மாற்றுவதென இவ்வரசு கருதியுள்ளது. இந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, முன்னோடி மும்முர கிராம வேலைவாய்ப்புத் திட்ட நிதியையும், ஊராட்சி ஒன்றியங்களுக்கான அரசு மானியங்களையும் ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகைகளையும், ஏனைய துறை நிதிகளையும் ஸ்டேட் வங்கி 9 சதவீத வட்டியில் அளிக்க ஒப்புக்கொண்டுள்ள ரூ. 75.89 லட்சம் கடன் உதவியையும் ஒருங்கிணைத்து திட்ட அறிக்கை ஒன்று வரையப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கைக்கு ரூ. 175.54 லட்சம் செலவில் அரசு ஒப்புதலளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

9. இத்திட்டப்பணியை நிறைவேற்றும் பொருட்டு, 28-2-1973 வரையிலான கால அளவுக்குக் கீழ்க்கண்ட பணியாளர்களை நியமித்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது :

	எண்ணிக்கை.
1. திட்ட அதிகாரி (கோட்ட ஊராட்சி அதிகாரி பதவித்தரத்தில்)	1
2. இளநிலைப் பொறியாளர்	1
3. மேற்பார்வையாளர்	1
4. ஊராட்சி வளர்ச்சிக் கணக்கர்	1
5. உதவியாளர்	1
6. சாலை இன்ஸ்பெக்டர்	2
7. ஜீப் வலவர்	1
8. இளநிலை உதவியாளர்	1
9. தட்டச்சர்	1
10. ஏவலாட்கள்	3

10. இத்திட்டம் 1972-73-இல் தொடங்கி மூன்றாண்டுகளுக்குச் செயலில் இருக்கும்.